**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, PADMANABHAPURAM**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No.58/2022 P.W. 1/L.W.1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. ஜெயசந்திரகுமார் | **Taluk** | : | |
| **Father's Name** | : | த/பெ. தங்கையன் | **Age** | : | |
| **Address** | : | | | | |
| **Phone No.** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 16.07.2026.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் தற்போது மணலிகரை முகவரியில் வசித்து சொந்தமாக தொழில் செய்து வருகிறேன். குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை எனக்குத் தெரியும். அவர்கள் எனது உறவினர்கள். தேதி, மாதம், வருடம் நினைவில்லை. எதிர்பாராத விதமாக பிரச்சனை ஏற்பட்டது. தற்போது குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுடன் சமாதானமாக சென்றுவிட்டேன். சந்தேகத்தின் அடிப்படையில் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களின் மீது புகார் மனுக் கொடுத்துவிட்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

2. நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் மனு சந்தேகத்தின் அடிப்படையில் நான் கொடுத்தது தான். **மேற்படி புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. மேற்படி சம்பவத்திற்கு பிறகு ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களின் மீது தவறு இல்லை என தெரிய வந்ததால் நாங்கள் ராசியாகி சமாதான மனு தாக்கல் செய்துள்ளோம்.

**சாட்சி அரசுத்தரப்பு சங்கதிகளிலிருந்து முற்றிலும் மாறுப்பட்ட சங்கதியை இந்நீதிமன்றத்தில் சாட்சியமளித்திருப்பதால் மேற்படி தனது தரப்பு சாட்சியை நீதியின் நலன் கருதி குறுக்குவிசாரணை செய்ய கேட்கிறார். இந்நீதிமன்றம் வழக்கின் தன்மை கருதி இந்திய சாட்சிய சட்டம் 1872 பிரிவு 154-ன் கீழ் அனுமதிக்கிறது.**

**அரசுத்தரப்பு குறுக்கு விசாரணை**

1\. நானும் ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களும் சமாதானமாகிவிட்டோம் என்றால் சரிதான். சமாதான மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் என்றால் சரிதான். **மேற்படி கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியிடு செய்யப்படுகிறது.**

2\. கடந்த 15.11.2021ம் தேதி இரவு 08.30 மணியளவில் எனது வீடு சம்பந்தமாக எனக்கும் எனது மனைவிக்கும் தகராறு ஏற்பட்டதில் எனது மனைவி அவர் உடன் பிறந்த தம்பியான மோகனுக்கு போன் மூலம் கூறிய சிறிது நேரத்தில் எதிரிகள் எனது வீட்டிற்கு வந்து என்னை பார்த்து கெட்ட வார்த்தைகள் பேசினர்கள் என்றும், கொலைமிரட்டல் செய்து தாக்கி காயப்படுத்தினார்கள் என்றும் போலீசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் கூறிவிட்டு தற்சமயம் நான் சமாதானமாகிவிட்டதால் வழக்கின் உண்மை நிலையை மறைத்து எனக்கே தெரிந்த காரணத்திற்காக உண்மை சங்கதியை மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை**

குறுக்கு விசாரணை இல்லை.

**மறுவிசாரணை:**

மறுவிசாரணை இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate No.I
Padmanabhauram .